**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C. 59/2016**

**Prosecution witness : அ.சா. 1** **Date : 07.03.2024**

| | |
|---|---|
| **Name : சாந்தி** | **Caste :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Religion :** |
| **Taluk :** | **Age :** |

(A6, A11 Died) **( others Accused absent. Petition filed and allowed)**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் மேச்சேரியில் குலாளர் தெருவில் குடியிருந்து வருகிறேன். எனக்கு இரண்டு மகன்கள் உள்ளனர். எனது பெரியமகன் பெயர் ஷியாம் ஆகும். கடந்த 2015ம் வருடம் இரவு 09.00 மணிக்கு மேல் நானும் எனது கணவரும் வீட்டில் இருந்த சமயத்தில் நான்கு அடையாளம் தெரியாத நபர்கள் வீட்டிற்குள் வந்தார்கள். அவர்களுடைய கையில் பைல் மட்டும் இருந்தது. நான் உள்ளளே எதற்காக வந்தீர்கள் என்று கேட்டபோது கதவை சாத்திக் கொண்டார்கள். என்னிடம் கோடி கணக்கில் பணம் உள்ளது என்றும் கட்டி கட்டியாக தங்கம் உள்ளது என்றும் சொன்னார்கள். நான் அவர்களிடம் இல்லை என்று சொன்ன பிறகு நானே பிரோவை நீக்கி காட்டி எங்களிடம் உள்ள நகையை காட்டினேன்.

2). பணம் ரூ.2,32,500/- மற்றும் நகை ஆகியவற்றை எடுத்து சென்று விட்டார்கள் பிறகு இது சம்மந்தமாக எனது கணவர் சொல்ல நான் எழுதி காவல் நிலையம் சென்று எழுத்து பூர்வமாக புகார் மனு கொடுத்தேன். புகார் மனுவில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். புகார் மனு **அ.சா.ஆ.1 ஆகும்.** திருடிச்சென்ற நபர்களை அடையாளம் எனக்கு தெரியாது.

3). பிறகு சில நாட்கள் கழித்து பணம் மற்றும் நகை சிலவற்றை கிடைத்து

விட்டதாக சொன்னார்கள். நான் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்து நகை மற்றும் பணத்தை இடைக்கால பொறுப்பில் பெற்றுச்சென்றேன். நான் பெற்றுச்சென்ற நகைகள் தற்போது நீதிமன்றத்தில் ஆஜர் செய்து அடையாளம் காட்டி பின்னர் எனது பொறுப்பில் பெற்றுச்சென்றேன். 1) பணம் ரூ.1, 82, 000/– ( ஆயிரம் ரூபாய் நோட்டுக்கள் எண்ணிக்கை 182) **சா.பொ1 ஆகும். 2**) கல் முகப்பு இரண்ட சாரம் செயின் ஒன்று. சுமார் 75.22 மிகி **சா.பொ2 ஆகும். 3**) சாதா வளையல் இரண்டு. எடை 41.37 மி.கி **சா.பொ3 ஆகும்.** 4) டாலர் மற்றும் செயின் ஒன்று. அதன் எடை சுமார் 40 மி.கி **சா.பொ4 ஆகும்.** 5) மைனர் செயின் ஒன்று. அதன் எடை சுமார் 22.50 மிகி **சா.பொ.5 ஆகும்.** 6) சாதா நெக்லஸ் செயின் ஒன்று ( கல்வைத்த நெக்லஸ் ஒன்று). அதன் எடை சுமார். 24.49 மி.கி **சா.பொ.6 ஆகும்.** 7) மெசின் மைனர் செயின் ஒன்று. அதன் எடை சுமார் 11.73 மி.கி **சா.பொ.7 ஆகும்.** 8) ஜென்ஸ் கைச்செயின் ஒன்று. அதன் எடை சுமார் 25 மி.கி **சா.பொ.8 ஆகும்.** 9) SS கல் மோதிரம் ஒன்று. அதன் எடை சுமார் 9 மி.கி **சா.பொ.9 ஆகும்.** 10) கட்டி மோதிரம் ஒன்று. அதன் எடை சுமார். 6.84 மி.கி **சா.பொ.10 ஆகும்.** 11) கசை மோதிரம் ஒன்று. அதன் எடை சுமார் 5.9 மி.கி **சா.பொ.11 ஆகும்.** 12) கல்பதித்த மோதிரம் ஒன்று. அதன் எடை சுமார் 5.20 மி.கி **சா.பொ.12 ஆகும்.** 13) டிசைன் தோடு ஒரு ஜோடி. அதன் எடை சுமார் 5.42 மி.கி **சா.பொ.13 ஆகும்.** 14)பவளமாலை கைச்செயின் ஒன்று. ( இரண்டாக வெட்டியது ) அதன் எடை சுமார் 10.46 மி.கி **சா.பொ.14 ஆகும்.** 15) வாதியின் மகன் ஷியாமின் திருமண பதிவு சான்று ஒன்று. **சா.பொ.15 ஆகும்.** 16) நோக்கிய செல்போன் ஒன்று. அதன் மாடல் RM–944 **சா.பொ16 ஆகும்**. 17) வாதி சாந்தி செல்போன் நோக்கியா. அதன் மாடல் 302 கருப்பு கலர். (சுக்குநூறாக உடைந்த நிலையில் உள்ளது)**சா.பொ.17 ஆகும்.** 18) வாதியின் சாந்தி செல்போன் நோக்கியா அதன் மாடல் 105 கருப்பு கலர். **சா.பொ.18 ஆகும்.** 19)சாம்சங் செல்போன் டூயல் சிம் பிரவுன் கலர் ஒன்று. அதன் மாடல் GT–B5722 **சா.பொ.19 ஆகும்.**

4) எங்கள் வீட்டில் திருடிய நபர்களை பார்த்தால் என்னால் அடையாளம் சொல்லமுடியும். ஆனால் நேரில் பார்த்தால் அடையாளம் சொல்லமுடியும். எதிரிகள் நீதிமன்றத்தில் ஆஜர் இல்லை. அவருடைய வருகையின்மையால் அடையாளம் குறித்து ஆட்சேபனை செய்யமாட்டேன் என்று மனு வாயிலாக தெரிவிக்கப்பட்டது. சம்பவத்திற்கு பிறகு 15 நாட்கள் கழித்து மத்திய சிறையில்

நடந்த அடையாள அணிவகுப்பில் கலந்து கொண்டேன். அங்கு எதிரிகளை அடையாளம் காட்டுவதற்காக உத்தரவிடப்பட்டு நீதிமன்ற நடுவர் முன்னிலையில் 3 சுற்று வாயிலாக அடையாளம் காட்டினேன். நான்கு எதிரிகளை காட்டுவதற்காக உத்தரவிடப்பட்டு அதன்பேரில் நானும் எனது கணவரும் அடையாளம் காட்டினோம். எனது கணவர் கடந்த 26.01.2016 ம் தேதியன்று உடல் நிலை சரியில்லாமல் இறந்துவிட்டார். அவரது இறப்பு சான்று நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எனது கணவர் இறப்பு சான்றிதழ் **அ.சா.ஆ.2 ஆகும்.** போலிசார் என்னை விசாரித்தனர்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–</u>

5) நகை பணத்தை யார் எடுத்தார்கள் என்று எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. நான்கு நபர்களில் யார் பணத்தை எடுத்தார்கள் யார் நகையை எடுத்தார்கள் என்று எனக்குதெரியாது. நகை விவரம் யார் எழுதினார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது. எந்த எந்த நகை காணவில்லை என்ற விவரத்தை காவல் நிலையத்தில் நான் தான் சொன்னேன் என்றால் சரியல்ல. எனது கணவர் சொன்னார் எந்த போலிசார் எழுதினார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது. காவல் நிலையத்தில் எனது கணவர்தான் புகாரை எழுதிக்கொடுத்தார் என்றால் சரிதான். நான் அதில் கையொப்பம் செய்தேன். அதில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியும்.

6) புகைப்படத்தை போலிசார் காட்டிதான் அடையாள சொன்னேன் என்றா்ல் சரிதான். அடையாள அணிவகுப்பிற்கு போலிசார் தான் அழைத்து சென்றார்கள் என்றால் சரிதான். பத்து ஆண்டுகள் ஆனால் தற்போது யார் என்று பார்த்தால் தான் அடையாளம் சொல்லமுடியாது என்றால் நேரடியாக பார்த்தால் தான் சொல்லமுடியும்.

7) போலிசார் எப்போது விசாரித்தார்கள் என்றால் விசாரித்தார்கள் ஆனால் தேதி நினைவில்லை. மத்திய சிறைசாலையில் நடந்த அணிவகுப்பு எந்த தேதியில் நடந்தது என்ற விவரம் நினைவில்லை. சம்பவ சமயத்தில் எனது கணவர்

வீட்டில் இருந்தார் என்றால் ஆமாம். சம்பவத்திற்கு முன்பாக வெளிநாட்டில் இருந்தார் என்றால் ஆமாம்.

8) எனது வீட்டிற்கு வந்த நான்கு பேர் எந்த வகையான, எந்த நிறத்தில் ஆடை அணிந்திருந்தார்கள் என்ற விவரம் மற்றும் எனது வீட்டிற்கு வந்த நான்கு பேர் உயர் எடை ஆகிய விவரம் எனக்கு தெரியாது என்றால் ஆமாம். காவல் நிலையத்தில் சம்பவத்திற்கு பிறகு சென்றேனா என்றால் சென்றேன். நான் காவல் நிலையம் சென்றபோது எதிரிகள் அங்கு இருந்தார்கள் என்றால் இல்லை.

9) புகைப்படம் எடுத்த போலிசார் எதிரிகள் குறித்து என்னிடம் காண்பித்தார்கள் என்றால் ஆமாம். புகைப்படத்தில் உள்ள நபர்கள் எவ்வாறு இருந்தார்கள் என்று என்னால் சொல்ல முடியாது என்றால் ஆமாம். எதிரிகள் எந்த ஊரைச்சேர்ந்தவர்கள் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் ஊட்டி ஊரைச்சேர்ந்தவர்கள். இந்த விவரம் யார் சொன்னார்கள் என்றால் DSP அவர்கள் சொன்னார்.

10) இந்த வழக்கில் உள்ள எதிரிகளை கண்டுபிடித்த பிறகு போலிசார் சொன்னவிவரத்தின் அடிப்படையில் எனது தம்பி ஆறுமுகம் சொல்லிதான் எதிரிகள் எங்கள் வீட்டிற்கு வந்தார்கள் என்ற விவரத்தை நான் தெரிந்து கொண்டேன். போலிசார் சொல்லித்தான் மேற்சொன்ன விவரம் எனக்கு தெரியும் என்றால் சரிதான். போலிசார் பெயர் விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. எந்த போலிசார் என்னிடம் வாக்குமூலம் வாங்கினார்கள் என்றால் எனக்கு தெரியாது.

11) நகை மற்றும் பணம் எங்கு கைப்பற்றப்பட்டது என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். எந்தெந்த பொருள் காணவில்லை என்ற விவரத்தை எனது கணவரிடம் நான் சொன்னேனா என்றால் ஆமாம். யாரிடம் புகாரை எழுதிக் கொடுத்தார்கள் என்றால் மேச்சேரி போலிசாரிடம் எழுதிக்கொடுத்தார் ஆனால் அந்த போலிசாரின் பெயர் விவரம் எனக்கு தெரியாது.

12) மத்திய சிறைச்சாலைக்கு யார் யார் சென்றோம் என்றால் நானும் எனது கணவரும் சென்றோம். நகை மற்றும் பணம் யார் யார் பெற்றோம் என்றால் நானும் எனது கணவரும் பெற்றோம். போலிசார் கேட்டுக்கொண்டதன் பேரில் நகைகளை நீதிமன்றத்தில் வந்து பெற்றுக்கொண்டோம். இந்த வழக்கில் யார் யார் இருக்கிறார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். நான் சொல்வது போல் சொன்ன நேரத்தில் சம்பவம் நடைபெறவில்லை என்றும், எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தமில்லை என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

**ஒம்/-தே.மயில்சாமி,**
**குற்றவியல் நீதித்துறை எண்.2**
**மேட்டூர்.**